# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
# கல்வியியல் கல்லூரி

தொலைபேசி:
04362-227782, 226720

**2010-2011-ஆம் கல்வியாண்டில் இளங்கல்வியியல் (B.Ed) பட்டப்படிப்பிற்கு முறைசார் கல்வி (Regular Course) மாணவ மாணவியர் சேர்க்கைக்கான அறிவிப்பு**

2010 - 11 ஆம் கல்வியாண்டில், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பிற்கு இருபாலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை எல்லா வேலை நாட்களிலும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சேர்க்கைப் பிரிவில் வழங்கப்படும். விண்ணப்பத்தினை நேரில் பெற விரும்புவோர் ரூ.600/- ஐ பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட / பழங்குடி வகுப்பினருக்கு ரூ.300/- (சாதிச் சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல் அளிக்க வேண்டும்). விண்ணப்பத்தினை அஞ்சலில் பெற விரும்புவோர் **The Registrar, The Tamil University. Thanjavur -613 010** என்ற பெயரில் தஞ்சாவூரில் காசாக்கும் வகையில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட கேட்பு வரைவோலையுடன் **(Demand Draft payable at Thanjavur')** தன் முகவரியிட்ட ரூ.25/- க்கு அஞ்சல் வில்லை ஒட்டிய ஏ4 அளவுள்ள உறையைச் சேர்த்து அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்பத்தை www.tamiluniversity.ac.in இணையதளத்திலிருந்தும் பெறறு உரிய வங்கி வரைவோயைுடன் அனுப்பலாம்

விண்ணப்பங்கள் வழங்கப்படுவதற்கான கடைசி நாள் 12.07.2010. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12.07.2010 ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி **பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். காலதாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சேர்க்கைக்கான கல்வித்தகுதி:**

இளநிலைப் பட்டப்படிப்பில் இதர வகுப்பினர் (O.C) - 50% : பிற்பட்ட வகுப்பினர் (B.C) - 45% மிகவும் பிற்பட்ட வகுப்பினர் (M.B.C) - 43% தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் (SC / ST) - 40% விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். மாற்றுத் திறனுடையோர் (Differently abled persons) இளநிலைப்பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**பி.எட் வகுப்பில் கற்பிக்கப்படும் பாடங்கள்: தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வரலாறு, புவியியல்.**

**முனைவர் சா.பி.சரவணன்**
**பதிவாளர்**